[1996 ஆகஸ்ட் 21

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போதே எல்.எஸ்.எஸ். சர்வீஸ், பாயின்ட் டு பாயின்ட் சர்வீஸ் ஓடிக்கொண்டிருக்கின்றன. சாதாரணப் பேருந்துகள், எல்.எஸ்.எஸ். பேருந்துகள், பாயின்ட் டு பாயின்ட் பேருந்துகள் ஆகிய 3 வகையான பேருந்துகள் ஓடிக்கொண்டுதான் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 191, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

191—

தானியங்கி போக்குவரத்து சைகைக் குறிகள் நிறுவுதல்

***851—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நகரில் தானியங்கி போக்குவரத்து சைகைக் குறிகள் (Automatic Traffic Signals) எப்பொழுது நிறுவப்படும்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கோவை மாநகரில் தானியங்கி போக்குவரத்து சமிக்ஞை விளக்குகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி இன்னும் மூன்று மாதங்களில் நிறைவடைந்து விடும்.

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் நகரமான கோவையில் போக்குவரத்து அதிகமாகி வருவதால் சாலை விபத்துக்களின் எண்ணிக்கையும் பெருகி வருகின்றன. எனவே, இதைக் கருத்தில் கொண்டு போக்குவரத்து சமிக்ஞை அமைக்கும் பணி விரைவுபடுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன். நகர்ப்புறப் பகுதிகளில் நெடுஞ்சாலைகள் மீதுள்ள உயரமான வேகத் தடைகளை அகற்ற இந்த அரசு முன்வருமா? அப்படி அகற்ற முடியவில்லை என்றால் அவைகள் இருப்பதை அறிவிக்கும் வகையில், இதுபோல சைகை விளக்குகளை அமைப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

1996 ஆகஸ்ட் 21]

முற்பகல் 10.50

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரில் 17 தானியங்கி போக்குவரத்து சமிக்ஞைகள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்னும் 3 மாத காலத்திற்குள்ளாக அவைகள் முடிவடையும். ஆகவே, இந்த வேகத் தடைகளைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, பகலில் அவைகள் தெரிவதற்காக அவைகள் மீது சுண்ணாம்பு அடிக்கப்பட்டு, வெள்ளை நிறத்திலே செயல்படுத்தப்படுகிறது. அப்படிச் செய்யாமல் இருந்தால் அவைகளைச் செய்ய வேண்டுமென்ற விதியும் இருக்கிற காரணத்தினால் அது செய்யப்படும்.

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரில் விருந்தினர் மாளிகைக்கு அருகிலுள்ள நெடுஞ்சாலையில் வேகத் தடைகள் உயரமாக இருப்பதன் காரணமாக அந்த வழியிலே செல்கிற ஆட்டோ சைக்கிள், ஸ்கூட்டர் போன்ற வாகனங்களிலே செல்லுகிறவர்கள் பலமுறை விபத்துக்குள்ளாகி உயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, அவைகளை முன்கூட்டியே அறிவிக்கும் வகையில் இதுபோன்ற சமிக்ஞை விளக்குகள் அமைக்க அரசு முன்வருமா என்று நான் மீண்டும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேகத் தடைகள் அதிகமாகக் கட்டப்பட வேண்டுமென்ற கோரிக்கையும் இருக்கிறது; வேகத் தடைகள் வேண்டாமென்ற கோரிக்கைகளும் இருக்கின்றன. குறிப்பாக, பள்ளிக்கூடங்கள் இருக்கிற பகுதிகளில், அதிகப் போக்குவரத்து இருக்கிற பகுதிகளில் வேகத் தடைகள் அமைக்கப்படுகின்றன. வேகத் தடைகள் இருப்பதை அறிவிக்கின்ற வகையிலேதான் வெள்ளைக் கோடுகள் அதன்மீது வரையப்படுகின்றன. இரவு நேரங்களிலே அங்கேயெல்லாம் விளக்குகள் அமைக்க ஆரம்பித்தால் தமிழகத்திலே பல விளக்குகள் அமைக்க வேண்டியிருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள் - விடைகள் நேரம் முடிவுற்றது.

[*குறிப்பு:* ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி [*] இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]